<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**REA.No. 2/2024**

**in**

**REP.No.36/2013**

மனுதாரர்களின் தரப்பு 2–சாட்சியின் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தியாகராஜீ | ம.சா | : | 2 |
| த/க/பெயர் | : | தங்கவேலு | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| ஊர் | : | எலந்தகுட்டை | தாலுக்கா | : | குமாரபாளையம் |
| வயது | : | 41 | நாள் | : | 09–10–2025 |

<u>குறுக்கு விசாரணை:–</u>

**1.** எலந்த குட்டை கிராமம் புல எண். **184** ன் மொத்த விஸ்தீரணம் **2** ஹெக்டேர் மற்றும் **92** ஏர்ஸ் ஆகும். மேற்படி புலஎண் **184** ஆனது **99** உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. புல எண் **184/1**சி விஸ்தீரனம் **4** ஏர்ஸ் ஆகும். புல எண் **184/4**சி விஸ்தீரனம் **4** எர்ஸ் ஆகும். மேற்படி இரண்டு புல எண்களின் விஸ்தீரணம் எட்டு ஏர்ஸ் என்றால் சதுர அடியில் அதன் விஸ்தீரணம் **8611** சதுர அடி ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் நிறைவேற்று மனுவில் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தின் புலத்தில் உள்ளதா என்றால் மனுவில் செக்குபந்தில் மாற்றம் உள்ளது. மனுவில் கிருஷ்ணமுதலியார் சொத்திற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டு இருப்பது சரியா என்றால் தவறாகும். பழனியப்பன் பூமிக்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டு இருப்பது சரியா என்றால் தவறாகும்.

2. 18 அடி அகல ரோட்டிற்கும் கிழக்கு என்று குறிப்பிடப்பட்டு இருப்பது சரியா என்றால் 184/1சி க்கு அது தவறாகும். 184/4சிக்கு அது சரியாகும். 30 அடி ரோட்டிற்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டிருப்பது 184/1சி க்கு அது சரியாகும் 184/4சிக்கு அது தவறாகும். 2 ம் எதிர்மனுதாரர் ராஜவேலுவின் நிலம் 184/4சியில் உள்ளது. 184/4சியில் உள்ள மொத்த விஸ்தீரணமான 4 ஏர்ஸ்சும் ராஜவேலுக்கு

பாத்தியப்பட்டது என்றால்? சரிதான். கம்ப்யூட்டர் பட்டாவில் நான்கு பெயர்கள் இருந்தாலும் அனுபவத்தில் ராஜவேல் மட்டும்தான் உள்ளார். நிலையான அ பதிவேட்டில் 184/4சிக்கு உரிமையாளர் பெயராக ராஜவேலுவின் தந்தை செங்கோடகவுண்டரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலையான அ பதிவேட்டில் 184/1சிக்கு உரிமையாளர் பெயராக முருகேசன் மகன் வெங்கடாஜலம் மற்றும் ராமசாமி கவுண்டர் மகன் வெங்கடாஜலம் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. 184 /4டி, 184 /4ஈ , ஆகிய இரண்டு உட்பிரிவுகளும் ராஜவேலுவின் பெயரில் உள்ளது.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2025.10.09 17:58:04 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

திருச்செங்கோடு.